கிறேன். மிக உயரிய அளவிலான இத்திட்டத்தை நிறைவேற்ற அயராது உழைத்த மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் இதர அரசு அதிகாரிகளுக்கும் எனது பாராட்டுதல்களை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

நல்ல மழை பெய்ததன் விளைவாக இம்மாநிலத்தின் பல பாகங்களில் பருவக்கால நிலைமைகள் மேம்பாடு அடைந்ததுடன், மாநிலம் முழுவதும் வேளாண்மைப் பணிகள் நல்ல முன்னேற்றம் அடைந்துள்ளன என்பதையும், துயர் தணிப்புப் பணிகளைத் தொடர்ந்து செய்வதற்கான அவசியம் இல்லை என்பதையும் கூற நான் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன். அதே சமயத்தில், வறட்சித் தணிப்புத் திட்டத்தில் நிறைவேற்றி முடிக்க இயலாமல்போன பணிகளுக்கு மாநில அரசின் இயல்பான நிதிவாயில்களிலிருந்து நிதி உதவி கொடுக்க வேண்டும் என்று அரசு கட்டளைகள் பிறப்பித்துள்ளது. இராமநாதபுரம், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களில் ஆங்காங்கு சில இடங்களில் உள்ள சில பாதிக்கப்பட்ட பகுதிகளில் குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக ரூ. 3 லட்சமும், தக்காவிக் கடன்களாக வழங்குவதற்காக ரூ. 4.53 லட்சமும் அண்மையில் வழங்க அரசு ஒப்பளித்தது. இதுபற்றிய நிலைமை குறித்து அரசு உன்னிப்பாகக் கவனித்து வருகிறது. இந்தப் பகுதிகளுக்கு எவ்வளவு விரைவில் துயர் துடைப்பு அளிக்க இயலுமோ அவ்வளவு விரைவில் அளிக்க அரசு தன்னால் இயன்ற அளவுக்கு உதவி செய்யும்.

6. நடை முறைக் கேள்வி.

நிதிக் கோரிக்கை பற்றிய நீண்ட கொள்கை விளக்கக் குறிப்பைப் பேரவையில் படிப்பது குறித்து

திரு. டி. மார்டின் : ஆன் எ பாயிண்ட் ஆப் ஆர்டர் சார். பேரவைத் தலைவர் அவர்களே, ஏறக்குறைய 13 அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஒவ்வொரு அமைச்சரும் அவரவர்களுடைய மானியக் கோரிக்கையின் குறிப்பை இந்த அவையில் வைக்கிறார்கள். இந்த மானியங்களின் மீது தொடர்ந்து விவாதங்கள் நடந்த பிறகு அமைச்சர்கள் நீண்ட பதிலைச் சொல்லுகிறார்கள். இப்போது இந்த முன்னுரையை அமைச்சர் வாசிக்க ஆரம்பித்தால் ஏறக்குறைய 45 நிமிடங்கள் ஆகிவிடும். இதனால் உறுப்பினர்கள் தங்கள் மேலான கருத்துக்களைச் சொல்ல நேரம் இல்லாது போய் விடும். ஆகவே, அமைச்சர் அவர்கள் இந்த அவையில் வைத்த அறிக்கையை வாசித்து அளித்ததாக ஏற்றுக்கொண்டு உறுப்பினர்களுடைய கருத்துக்களைச் சொன்ன பிறகு அமைச்சர் அவர்களுடைய மேலான கருத்துக்களைப் பிறகு கூறலாம்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இது வழக்கமாக வைக்கக்கூடிய கொள்கைக் குறிப்பு அல்ல. ரொம்ப சுருக்கமாக, துயர் தணிப்புப் பணிகள், நிலச் சீர்திருத்த விவரங்கள், இரண்டு

1970 மார்ச் 13] [திரு. கே. ஏ. மதியழகன்]

ஆண்டுகளாக அசெஸ்மெண்ட் செய்யப்பட்ட விவரங்கள், ரெவின்யூ போர்டு ஒழிப்பு முறையில் இருக்கிற காரியங்கள், கிராம ஊழியர்களுக்கான காரியங்கள் ஆகியவற்றைப் பற்றிச் சுருக்கமாக நானே தயாரித்த உரையே தவிர, வழக்கமாக அதிகாரிகளால் தயாரித்துக் கொடுக்கப்படும் குறிப்பு அல்ல. அமைச்சர்கள் மானியக் கோரிக்கையை முன்மொழிந்து 1½ மணி நேரம் பேசக் கூட உரிமை உண்டு. முக்கியமான கருத்துக்களை மாண்புமிகு உறுப்பினர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகப் படிக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இதைப் படிக்க வேண்டுமென்பதிலே அபிப்பிராயம் இல்லையென்றால் விட்டு விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அமைச்சர்கள் தங்களுடைய ஸ்டேட்மெண்டைப் படிப்பதற்கு உரிமை இருக்கிறது. தாங்கள் எழுப்பியது பாயின்ட் ஆப் ஆர்டர் அல்ல. நேரம் வீணாகிவிடும் என்று நீங்கள் கேட்கலாமே தவிர, படிப்பதிலே முறை இருக்கிறதா இல்லையா என்ற கேள்விக்கு இடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் மார்ட்டின் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக் கொள்வதற்கில்லை. பெரிய புத்தகமாக இருந்தால் உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் 45 நிமிட நேரம் ஆகலாம். இந்த அறிக்கை வெகு சீக்கிரத்திலே முடிந்துவிடக் கூடிய அளவிலே தயாரிக்கப்பட்டிருக்கிறது. இந்த அறிக்கையை மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் படிக்கும்போது உறுப்பினர்கள் அனைவரும் இருந்து கேட்டு அவர்கள் ஏற்கனவே படித்திருந்தாலும், படிக்காவிட்டாலும் விவாதத்தில் கலந்து கொள்ளுவதற்குச் சவுகரியமாக இருக்கும் என்ற அக்கறையின் காரணமாகத்தான் இதைப் படிக்கிறார்களே அல்லாமல் வேறு அல்ல. பல உறுப்பினர்கள் இதைப் படிக்கிறார்கள். சில உறுப்பினர்கள் படிக்காமல் போகிறார்கள். அவர்களுடைய காதுகளிலே இந்த அறிக்கையின் கருத்துக்கள் விழுவதற்கு உபயோகமாக நிதியமைச்சர் அவர்கள் இந்த அறிக்கையைப் படிக்க முன்வந்திருக்கிறார்கள்.

5. 1970-71-ம் ஆண்டுக்கான நிதிக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: நான் உறுப்பினராக உள்ளதற்குப் பெருமிதமடைகிற திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில் நிலச் சீர்திருத்தங்கள் உள்ளிட்ட பல சீர்திருத்தங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. வேளாண்மை உற்பத்தியைப் பெருக்குவதற்கு அரசு பல நடவடிக்கைகள் எடுத்துள்ளது. வேளாண்மை உற்பத்தி பெருக வேண்டுமென்றால், நில உரிமை முறையில் அடிப்படையான மாறுதல்கள் செய்யப்படவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. இந்தச் சூழலில், தமிழ் நாடு நில உச்ச வரம்புச் சட்டத்தைத் திருத்தி, நில உச்ச வரம்பு அளவை